OS No.  54/2015

Dated : 13.10.2023

Time:  12.40  p.m to 12.45 p.m

D.W- 1 சாட்சி புஷ்பம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை :

**1)** 1-ம் பிரதிவாதி என் கணவர். 52 வருடங்களுக்கு முன்பு எங்களுக்கு திருமணம் ஆனது. எனது பெற்றோர் ஊர் பெருமாபாளையம். என் தகப்பனார் பெயர் செல்லமுத்து தாயார் பெயர் செல்லம்மாள். என் மாமனாரின் தகப்பனார் பெயர் கோவிந்தன். அவருக்கு வாரிசுகள் பெருமாள், முத்தான் (எ) முத்துசாமி, மூக்காயி என்ற பெண் ஆவார்கள். நான் என்னுடைய பதிலுரையிலும், அறிவிப்பிலும் மேற்படி மூக்காயி, கோவிந்தனின் மகள் இருக்கிறார் என சொல்லவில்லை. பெருமாளின் வாரிசு ஒரே மகன் துரைசாமி, அவர் மனைவி தனபாக்கியம். தனபாக்கியம் பெருமாபாளையத்தை சேர்ந்தவர். அவரது அப்பா பெயர் செல்லமுத்து அம்மா பெயர் பழனியம்மாள்.

2) தனபாக்கியம் உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் கருப்பையா ஆவார். தனபாக்கியம் தன் கணவருக்கு முன்பே 2006 ல் காலமாகிவிட்டார். துரைசாமி 2012 ல் காலமானார். தனபாக்கியம் துரைசாமிக்கு குழந்தைகள் இல்லை. வாதி கோவிந்தனும் 1-ம் பிரதிவாதியும் என் மாமனார் முத்தான் (எ) முத்துசாமியின் பிள்ளைகள். அவர்களுடைய சகோதரிகள் பெயர் சீரங்காயி, சின்னம்மாள், சிந்தாமணி ஆவார்கள். அவருடைய திருமணம் என்னுடைய திருமணத்திற்கு முன்பே நடைபெற்றுவிட்டது.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**